**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் நாள் வியாழக்கிழமை**

**O.S. 60/2022**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW4-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **முத்து** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **த/பெ** | : | **நாகரெத்தினம்** | **கிராமம்** | : | **கிராம நிர்வாக அலுவலர், திருக்காரவாசல்** |
| **ஜாதி** | : | **--** | **தொழில்** | : | **கிராம நிர்வாக அலுவலர்** |
| **சமயம்** | : | **இந்து** | **வயது** | : | **36** |

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருக்காரவாசல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இன்றைய தினம் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எந்த வருடத்திலிருந்து திருக்காரவாசல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 2022 ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிக்கு வந்தது 2014 ம் வருடம் ஆகும். என்னிடம் காட்டப்படும் 2022-2023 ம் வருடத்திற்கு வழங்கப்பட்ட சான்று நகைக்கடனுக்காக என்னால் கொடுக்கப்பட்டது. மேற்படி தேதியில் புல எண்ணை பொறுத்து ராமன் என்பவர் சாகுபடி செய்து வருகிறார். மேற்படி சான்று வழங்கியதற்கான

பதிவேடு உள்ளதா என்றால் அவ்வாறு தனி பதிவேடு ஏதும் இல்லை. குறிப்பு மட்டும் எடுத்து வைத்துக் கொள்வோம். சிட்டா, அடங்கல் பதிவேடு எடுத்து வரவில்லை.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.